# மன்ற நிகழ்விற்கான கூட்டப்பொருள்

**பொருள் எண்: 01**

வடலூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் அக்டோபர் 2024 நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண்: 02**

வடலூர் நகராட்சி நகர்மன்றத்தலைவர் அவர்களின் 14.10.2024 நாளிட்ட கடிதத்தில் புதிய நகராட்சி அலுவலககட்டிடத்திற்கு வருகை தரும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கழிப்பிட வசதிகள் இல்லாததால் நான்கு இருக்கைகள் கொண்ட பொதுக்கழிப்பிடம் அமைக்கவும் மேலும் மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களை சந்திக்க வரும் அலுவலர்கள் மற்றும் மனு அளிக்க வரும் பொதுமக்கள் அமர ஏதுவாக நகர்மன்றத்தலைவர் அறைக்கு அருகில் உள்ள இடத்தில் தடுப்புச்சுவர் அமைத்து இருக்கைகள், குளிர்சாதன வசதி ஏற்படுத்துல் மற்றும் அலுவலக முன்புறம் பொதுமக்கள் அமர GI Sheet மற்றும் PVC நாற்காலிகள் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும், நகர்மன்றத்தலைவர் அவர்களின் நேரடி அறிவுறையின் பேரிலும் மேற்படி பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.19.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய்நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். /2024/இ1.**

**பொருள் எண்: 03**

வடலூர் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. மேற்கண்ட பேருந்து நிலைய முதல் தளத்தில் சிமெண்டினால் ஆனா Grano Flooing உள்ளதை Tiles பணியாக மேற்கொள்ளவும், மேலும் மும்முனை மின் இணைப்பு மற்றும் கடைகளுக்கு ஏற்றார் போல் மின்மீட்டர் பொருத்துவதற்கு ஏதுவாக தனித்தனியே Busbar type மீட்டர் போர்டு அமைக்கவும், மேலும், மின் கட்டணங்களை செலுத்தாத கடைகளின் மின் இணைப்புகளை துண்டிக்கவும் பேருந்து நிலைய படிகட்டுகளின் தரைதளத்தில் அனைத்து மின் மீட்டரை பொருத்த நடவடிக்கை எடுக்கவேண்டி தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலர்களால் நேரில் கள ஆய்வு செய்து தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலும் நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுரைகளின்படியும் மேற்படி பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.20.00 இலட்சத்தினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1264 /2024/இ1.**

**பொருள் எண்: 04**

வடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4, பாட்டை தெருவில் அமைந்துள்ள MCC வளாகத்தில் BOV வாகனம் நிறுத்துவதற்கு ஏதுவாக மின்வசதி செய்யப்பட்டுள்ள இடங்களில் மழைபொழியும் போது மழைநீர் வெல்டுமெஸ் அமைந்துள்ள பகுதிகளின் வழியாக உள்ளே புகுவதால் மின்ஒயர்கள் பழுதாகி பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேலும், அன்றாடம் சேகரமாகும் குப்பைகளின் விவரங்களை எழுதுவதற்கு ஏதுவாக பெயர் பலகை மற்றும் அவை அமைய உள்ள பகுதிகளிலும் GI Sheet அமைக்கவும், மேலும் வார்டு எண்.1 பூசாலிக்குப்பம் MCC மையத்தில் பழுதடைந்துள்ள ஆழ்துளை கிணற்றை சரிசெய்து புதிய மின்மோட்டார், HDPE பைப் மற்றும் மின்ஒயர்கள் அமைத்து தருமாறு துப்புரவு ஆய்வாளர் குறிப்பு நாள்.25.09.2024ன்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.50 இலட்சத்தினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** .மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். /2023/இ1)**

**பொருள் எண்: 05**

வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளில் திடக்கழிவுகளை சேகரித்து தரம் பிரித்து வழங்கும் பணியை மேற்கொள்ள TECTUS INFRA PVT Ltd Coimbatore என்ற நிறுவனத்திற்கு மூன்றாண்டு கொண்ட தொகுப்பு காலத்திற்கு கடந்த ஆண்டு பணி உத்திரவு (ந.க.எண்.515/2023/எச்1, நாள்.05.05.2023) வழங்கப்பட்டு 01.06.2023 முதல் பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்கண்ட நிறுவனத்தின் முதலாம் ஆண்டிற்கான ஒப்பந்த காலம் 31.05.2024 உடன் முடிவடைந்துள்ள நிலையில் 01.06.2024 முதல் 31.08.2024 முடிய மூன்று மாதத்திற்கு நகர் மன்ற தீர்மானம் எண்.529, நாள்.24.06.2024ல் பணி நீட்டிப்பு செய்திட அனுமதி வழங்கியுள்ளது. மேலும், மேற்கண்ட நிறுவனத்தின் பணிகள் திருப்திகரமாக உள்ளதால், ஏற்கனவே பணிபுரிந்து வரும் TECTUS INFRA PVT Ltd Coimbatore என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்த காலத்தினை 01.09.2024 முதல் 31.05.2025 வரை ஒன்பது மாதங்களுக்கு KPT நிபந்தனைகளின் அடிப்படையில் பணி நீட்டிப்பு வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு :-** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு செலவின தொகையை வருவாய் நிதி மற்றும் 15வது நிதி குழு மானியத்திலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 515/2023/எச்1)**

**பொருள் எண்: 06**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை - 28 அவர்களின் கடித எண்.18313/ஜே2, நாள்.26.12.2023ல் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு அரசு வழங்கும் தங்க பதக்கத்தினை சென்னை தமிழ்நாடு கைவினை மேம்பாட்டு கழகம் மூலமாக அந்தந்த நகர்புற - உள்ளாட்சி அமைப்புகள் தங்க பதக்கத்திற்கான விலையை நேரில் செலுத்தி பெற்று வழங்க தெரிவிக்கப்பட்டது. இந்நகராட்சியில் பணிபுரியும் திரு.தெ.ஆறுமுகம் ஓட்டுநர் அவர்களின் பெயர் தேர்வு செய்யப்பட்டுள்ளதால் தங்க பதக்கத்தினை பெற்று வழங்க தமிழ்நாடு கைவினை மேம்பாட்டு கழகம் சென்னை - 28 அவர்களுக்கு அனுப்பப்பட்டது. இதன் பேரில் தமிழ்நாடு கைவினை மேம்பாட்டு கழகம் அவர்களின் கடித எண்.271/எஸ்பி/24-25 , நாள்.04.10.2024 ன் அடிப்படையில் வழங்கப்பட்ட பட்டியல் தொகை ரூ.37200/- ஐ மேற்கண்ட துறைக்கு செலுத்தி திரு.தெ.ஆறுமுகம் ஓட்டுநர் அவர்களுக்கு தங்க பதக்கம் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு :-** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவின தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 300/2023/சி1)**

**பொருள் எண்: 07**

வடலூர் நகராட்சியில் 01.04.2024 முதல் 31.03.2025 வரையிலான காலங்களுக்கு ஒப்பந்த பணிக்காக பிடித்தம் செய்யப்பட்ட GST தொகையினை GST க்கான வலைதளத்தில் பதிவு ஏற்றம் மற்றும் பதிவிறக்கம் செய்யவும் ஒப்பந்ததாரர் GST தொகை ஒப்பந்ததாரர் TIN எண்ணில் பதிவேற்றம் செய்ய பட்டயக் கணக்கர் அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.2500/- வீதம் 12 மாதங்களுக்கு ரூ.30,000/- நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவின தொகையை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 4482/2023/பி1**

**பொருள் எண்: 08**

வடலூர் நகராட்சியில் 01.04.2024 முதல் 31.03.2025 வரையிலான நான்கு காலண்டுகளுக்கு ஒப்பந்த பணிக்காக பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரித்தொகையினை வருமான வரித்துறைக்கான வலைதளத்தில் வருமபான வரி கணக்கில் பதிவு ஏற்றம் மற்றும் பதிவிறக்கம் செய்யவும் வங்கி வருமான வரி கணக்குடன் ஒப்பிட்டு சரி செய்து (E-Filling) செய்ய தோராய செலவினம் தொகை ரூ.50,000/- நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவின தொகையை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.** 4482/2023/பி1

**பொருள் எண்: 09**

வடலூர் நகராட்சியில் 2018 - 2019ம் ஆண்டு ரூ.2,26,79,786/- வரவாக வரப்பெற்று ரூ.69,00,807/- ரொக்கமாக செலவு செய்யப்பட்டமைக்கு உரிய விளக்கம் வழங்கமாறு வருமான வரித்தொகை அலுவலகத்திலிருந்து 14.02.2024 அன்று AAAAE 34063ல் கடிதம் வரப்பெற்றுள்ளது. அதன் அடிப்படையில் 19.02.2024 அன்று காலை 11.00 மணிக்கு ஆஜராக உரிய விளக்கம் வழங்க கோரப்பட்டதற்கிணங்க பட்டையக்கணக்கர் மூலம் ஆஜராகி 7 முறை நேரில் சென்று வந்தமைக்கும் மற்றும் பயணச்செலவினம் சேர்த்து ரூ.45000/- வழங்குமாறு பட்டியல் வரப்பெற்றது. மேற்கண்ட செலவினத்தொகை ரூ.45000/- நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** 1. மேற்கண்ட நடவடிக்கை மேற்கொள்ளும் அதற்கான செலவினத்தொகையும் மன்றம் அனுமதிக்கலாம்,

2. நிர்வாக நலன் கருதி அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி உரிய நடவடிக்கைக்கும் உரிய செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 4482/2023/பி1**

**பொருள் எண்: 10**

வடலூர் நகராட்சி அலுவலக பொதுபிரிவு, சுகாதாரபிரிவு, நகரமைப்புபிரிவு, வருவாய்பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் உள்ள கணினிகளின் பயன்பாட்டிற்கு நெட்வொர்க் இணைப்பு என்பது இன்றியமையாதது. மேலும், அலுவலக கணினிகள் பயன்பாட்டிற்கு பல்லவன் நெட்வொர்க், எண் 03, சீனுவாச காம்ப்ளக்ஸ், நெய்வேலி மெயின் ரோடு, வடலூர் நிறுவனத்தாரால் ASIANET இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி, பணிக்கு கட்டணம் செலுத்துதல் வேண்டி 2024-2025 மார்ச் முடிய தோராய செலவினம் ரூ.40,000/- நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.1250/2023/இ1)**

**பொருள் எண்: 11**

வடலூர் நகராட்சி பெருநிவனங்களின் சமூகபொருப்புணர்வு திட்டம் ( NLC - CSR) 2024-2025 நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் மூலம் மேல்நிலை நீர்தேக்கதொட்டிகளுக்கு ஆழ்துளை கிணறுகள் அமைத்திட மாவட்ட ஆட்சித்தலைவர் கடலூர் மாவட்டம் அவர்களின் கடிதந.க.எண் பஇ1/4621/2019,நாள்.30.07.2024ன்படி வடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண்.07, காட்டுக்கொல்லை மற்றும் வார்டுஎண்.22 மாருதி நகர் ஆகிய பகுதிகளில் ஆழ்துளை கிணறுகள் அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி, பணிக்கு மும்முனை மின் இணைப்பு வழங்குமாறுஇவ்வலுவலக கடிதந.க.எண் 713/2022/இ1, நாள்.13.09.2024 மூலமாக மின்சாரவாரியத்திற்கு கடிதம் அனுப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி கட்டணம் செலுத்துமாறு இளமின் பொறியாளர் வடலூர் நகரம் அவர்களின் கடிதந.க.எண். இ/பி/பொ/இ ப/ நகரம்/வட/கோ.மதி /இ.எண்.84 (ம) 85, நாள்.04.10.2024 மூலமாக பட்டியல் சமர்பிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின்விபரம் | தொகை ரூ |
|---|---|---|
| 1, | மாருதி நகர் ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி | 50,620/- |
| 2 | காட்டுக்கொல்லை ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி | 50,620/- |
| | **மொத்தம்** | **1,01,240/-** |

மேற்படி, தொகைரூ.1,01,240/-நகராட்சி வருவாய்நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண். 713/2024/இ1)**

**பொருள் எண்: 12**

வடலூர் நகராட்சி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை, அவர்களின் கடித ந.க.எண்.18490/2023/EA-2. நாள். 20.05.2024 கடிதத்தில் 15வது நிதிக்குழு மான்யம் Tied Grand 2023-24 ஆம் ஆண்டு நிதியின் கீழ் வார்டுஎண்.19, ஆர்கே மூர்த்தி நகரில் 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி, பம்புரூம், பகிர்மான குழாய் பதித்தல் மற்றும் சுற்றுசுவர் அமைக்கும் பணிக்கு ரூ.83.00 இலட்சத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. நகராட்சி நிர்வாக இயக்குநர் செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் செயல்றை ந.க.எண் 1042/2023/ஆ1, நாள்.25.06.2024ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.. மேற்படி, பணிக்கு இடையூராக உள்ள மின்கம்பி பாதை மற்றும் மின்கம்பத்தினை இடம்மாற்றி அமைக்குமாறு இவ்வலுவலக கடிதந.க.எண் 713/2022/இ1, நாள்.13.09.2024 மூலமாக மின்சார வாரியத்திற்கு கடிதம் அனுப்பட்டதில் இளமின் பொறியாளர் வடலூர் நகரம் அவர்களின் கடித ந.க.எண்இ/பி/பொ/இப/நகரம்/வட/கோ.மதி/இ.எண்.43,நாள்.09.10.2024 மூலமாக ரூ.69850/- செலுத்துமாறு பட்டியல் சமர்பிக்கப்பட்டுள்ளது. நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு :-** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண்.803/2024/இ1**

**பொருள் எண்: 13**

இவ்வலுவலக செயல்முறை உத்தரவு ந.க.எண்.488/2023/இ1, நாள்.05.06.2023ன் மூலம் மாண்புமிகு முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1, பூசாலிக்குப்பம் அரசு மேல்நிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள மையசமையற்கூடத்திலிருந்து உணவுகள் தயார் செய்து இந்நகராட்சிக்குட்பட்ட 08 பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்கள் மற்றும் குறிஞ்சிப்பாடி பேரூராட்சிக்குட்பட்ட 08 பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு தினசரி குறித்த நேரத்தில் உணவுகள் வழங்கும் பணிக்கு திரு.M.சக்திவேல் ஒப்பந்ததாரர், எண்.26,C, மேலத்தெரு சேராக்குப்பம் வடலூர் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு அதன்படி தினசரி பணி மேற்கொண்டு வருகிறார். அன்னாரின் ஓராண்டு காலம் 24.08.2024ல் முடிவடைந்துள்ளதால், தற்போது அன்னாருக்கு அதே விலை விகிதத்தில் மேலும் ஓராண்டிற்கு 25.08.2024 முதல் 24.08.2025 வரை கால நீட்டிப்பு செய்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.அவசரஅவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 488/2023/இ1**

**பொருள் எண்: 14**

வடலூர் நகராட்சி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண் 24809/2024/EA-2. நாள்.20.09.2024ன்படி 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2024-2025 Tied Grand ன்கீழ் ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவில் பிரசுரமாகும் ஒரு தமிழ் நாளிதழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் (அமைத்து பதிப்புகளிலும்) 50 cm அளவுக்கு மிகாமல் முதல் பக்கமும் அல்லாமல் கடைசி பக்கமும் அல்லாமல் விளம்பரம் செய்யுமாறு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தலைமை செயலகம் சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில் தினமணி தமிழ் நாளிதழ் மற்றும் Deccan Chronicle Tamilnadu ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டது. கீழ்கண்ட விபரப்படி கட்டணம் செலுத்த வேண்டி பட்டியல் சமர்பிக்கப்பட்டுள்ளது. வருவாய் நிதியில் செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ்கள்பெயர்கள் | தொகை |
|---|---|---|
| 1 | தினமணி (தமிழ்நாளிதழ்) | 36000/- |
| 2 | Deccan Chronicle Tamilnadu(ஆங்கிலநாளிதழ்) | 33264/- |
| 4 | CGST | 1731/- |
| 5 | SGST | 1731/- |
| | மொத்தம் | **72727** |

**அலுவலகக்குறிப்பு** மன்றம்அனுமதிக்கலாம்.

**(கோப்பு. எண்.1080/2024/இ1)**

**பொருள் எண்: 15**

வடலூர் நகராட்சியில் நகரமைப்பு பிரிவின் மூலம் சாலையோர வியாபாரிகளுக்கான NULM – SUSV திட்டத்தில் தெருவோர வியபாரிகளின் (Detaild Implementation Plan) தயார் செய்யப்பட்டது. எனவே, ஏதென் அறக்கட்டளை மற்றும் கல்வி அறக்கட்டளை ( The Athen Charitable and Educational Trust) நிறுவனத்திற்கு ரூ.6500/– இத்தொகையை வழங்க வேண்டி பட்டியல் தொகை வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட, செலவினத்தொகை வழங்க மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 345 /2024/எப்1**

**பொருள் எண்: 16**

வடலூர் நகராட்சிக்கு வருவாய் பிரிவின் மூலம் சூரியா பிரிண்டர்ஸ் , வடலூர், சொத்து வரி மற்றும் குடிநீர் கட்டண கேட்பு தொகை அறிவிப்பு (Demand notice) 15080 பக்கங்கள் அச்சடிக்கப்பட்டது. ஒரு பக்கத்திற்கு ரூ.3.50பைசா வீதம் 15080x3.50= ரூ.52780/– இத்தொகையை வழங்க வேண்டி பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட செலவினத்தொகை வழங்க மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். 36 /2024/எப்1**

**பொருள் எண்: 17**

வடலூர் நகராட்சிக்கு எதிராக திரு.பழனிவேல் என்பவர் தனது சொத்து பிரச்சனை காரணமாக குறிஞ்சிப்பாடி மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.EP 7/2023 O.S.No.104/2014 ல் நகராட்சி ஆணையாளர் அவர்களை சேர்ந்துள்ள படியால் இந்நகராட்சியின் சார்பில் எதிர்வாதுரை செய்து வழக்காடவும், அதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/– அரசு வழக்கறிஞர் திரு. D.கோபாலகிருஷ்ணன் அவர்களுக்கு வழங்கிடவும் கோரி பட்டியல் தொகை சமர்ப்பித்துள்ளார். எனவே, மேற்கண்ட தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**கோ.எண். /2024/எப்1**

**பொருள் எண்: 18**

வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18, ஓ.பி.ஆர் தெரு5வது சிமெண்ட் கான்கீரிட் சாலை சிதலமடைந்து உள்ளதால் மழைகாலங்களில் மழைநீர் தேங்கி பொதுமக்கள் வாகன போக்குவரத்திற்கும், பள்ளிக்கு செல்லும் மாணவ / மாணவியர்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகும் சூழ்நிலை ஏற்படுவதால் அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மேற்படி, சிமெண்ட் கான்கீரிட் சாலை புணரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.10.20 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறி** மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு. எண்.1197/2024/இ1**

**பொருள் எண்: 19**

வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.16, சோமசுந்தரம் நகர் முதல் தெரு குண்டும் குழியுமாக மண் சாலையாக உள்ளதால் மழைகாலங்களில் மழைநீர் தேங்கி பொதுமக்கள் வாகன போக்குவரத்திற்கும், பள்ளிக்கு செல்லும் மாணவ / மாணவியர்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகுவதால் அப்பகுதி பொதுமக்கள் சாலை அமைத்து தருமாறு கோரப்பட்டதற்கிணங்க நகர்மன்ற உறுப்பினர் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும் மேற்படி, பகுதியில் புதியதாக சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு. எண்.1192/2024/இ1**

**பொருள் எண்: 20**

வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.19, எம்.ஜீ.ஆர் நகர் 5 மற்றும் 6வது சந்து மண் சாலையாக உள்ளதால் மழைகாலங்களில் மழைநீர் தேங்கி பொதுமக்கள் வாகன போக்குவரத்திற்கும், பள்ளிக்கு செல்லும் மாணவ / மாணவியர்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகும் சூழ்நிலை ஏற்படுவதால் அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி புதியதாக சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.15.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்** மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு. எண். /2024/இ1**

**பொருள் எண்: 21**

வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.22, முத்துகிருஷ்ணன் முதல் தெரு மண் சாலையாக உள்ளதால் மழைகாலங்களில் மழைநீர் தேங்கி பொதுமக்கள் வாகன போக்குவரத்திற்கும், பள்ளிக்கு செல்லும் மாணவ / மாணவியர்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகும் சூழ்நிலை ஏற்படுவதால் அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர் அவர்களிடமிருந்து 17.10.2024 நாளிட்ட கடிதம் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து, நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி புதியதாக சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.80 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு. எண். /2024/இ1**

**பொருள் எண்: 22**

வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.12, வாகீசன் பிள்ளை 5வது சாலை மற்றும் வார்டு எண்.13, வாகீசன் பிள்ளை பிரதான சாலை மண் சாலை மற்றும் பழைய சிமெண்ட சாலைகள் மிகவும் சேதமடைந்து குண்டும் குழியுமாக உள்ளதால் மழைகாலங்களில் மழைநீர் தேங்கி பொதுமக்கள் வாகன போக்குவரத்திற்கும், பள்ளிக்கு செல்லும் மாணவ / மாணவியர்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகும் சூழ்நிலை ஏற்படுவதால் அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர் மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி சிதலமடைந்த சிமெண்ட் சாலைகளை புணரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.15.20 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு. எண். /2024/இ1**

**பொருள் எண்: 23**

வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.20, செல்லியம்மன் கோயில் தெரு 30 மீட்டர் அளவில் மண்சாலையாகவும் மீதம் உள்ள சாலை சிமெண்ட் கான்கீரிட் சாலையாகவும் உள்ளது, தோமையார் நகர் வடக்கு 4வது தெரு சிமெண்ட் கான்கீரிட் சாலை மற்றும் வார்டு எண்.26, ஆர்.சி. நேதாஜி சாலையின் இரண்டாவது குறுக்கு தெருவில் அமைந்துள்ள சிமெண்ட சாலைகள் மிகவும் சிதலமடைந்து குண்டும் குழியுமாக உள்ளதால் மழைகாலங்களில் மழைநீர் தேங்கி பொது மக்கள் வாகன போக்குவரத்திற்கும், பள்ளிக்கு செல்லும் மாணவ / மாணவியர்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகும் சூழ்நிலை ஏற்படுவதால் அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர் அவர்களிடமிருந்து 25.07.2024 நாளிட்ட கடிதம் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து, நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி சிதலமடைந்த சிமெண்ட் சாலைகளை புணரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு. எண். 1126/2024/இ1**

**பொருள் எண்: 24**

வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13, அருள்ஜோதி நகர், காமராஜர் நகர் இரண்டாவது தெரு மற்றும் வார்டு எண்.10, வண்டிக்காரன் முதல் தெரு, மண் சாலையாக உள்ளதால் மழைகாலங்களில் மழைநீர் தேங்கி பொதுமக்கள் வாகன போக்குவரத்திற்கும், பள்ளிக்கு செல்லும் மாணவ / மாணவியர்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகும் சூழ்நிலை ஏற்படுவதால் அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர் அவர்களிடமிருந்து மற்றும் நகர்மன்ற தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மேற்படி, சாலைகளுக்கு தார்சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.17.50 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு. எண். /2024/இ1**

**பொருள் எண்: 25**

வடகிழக்கு பருவமழை 2024 இந்நகராட்சிக்குட்பட்ட தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரை வெளியேற்ற தேவையான இயந்திரம் கொள்முதல் செய்தல் மற்றும் வாடகைக்கு அமர்த்துதல், மரம் அறுக்கும் இயந்திரம், முகாம்களில் தங்கும் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்தல் மற்றும் இதர பாதுகாப்பு பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்தில் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.593 , நாள்.30.09.2024 அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 22.10.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | M/S சாய் சக்தி & கோ, சேலம் | (+)1.54 % அதிகம் |
| 2 | A.Stalin, வடலூர் | (–) 0.23 % குறைவு |

**அலுவலகக்குறிப்பு:–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.23 % குறைவாக கொடுத்துள்ள A.Stalin, ஒப்பந்ததாரர், வடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.1064 /2024/இ1)**

**பொருள் எண்: 26**

இந்நகராட்சிக்கு பொது சுகாதார பிரிவிற்கு JCB வாகனம் இயக்குவதற்கு நிரந்தர பணியாளர் இல்லாததால் ஒரு நபரை வெளிகொணர்வு முகமை மூலமாக பணியமர்த்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்தில் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.591,நாள்.30.09.2024 அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 22.10.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | M/S சாய் சக்தி & கோ, சேலம் | (+)1.44 % அதிகம் |
| 2 | A.ஸ்டாலின், வடலூர் | (–) 0.22 % குறைவு |

**அலுவலகக்குறிப்பு:–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.22 % குறைவாக கொடுத்துள்ள A. ஸ்டாலின், ஒப்பந்ததாரர், வடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.1063 /2024/இ1)**

**பொருள் எண்: 27**

இந்நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையம் அமைக்கும் பணியில் பேருந்துகள் உள்நுழைவு வாயில் பகுதியில் RCC அலங்கார வளைவு மற்றும் பேருந்துகள் வெளியே செல்லும் வாயில் பகுதியில் RCC அலங்கார வளைவு அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.20.00 இலட்சத்தில் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.572, நாள்.30.09.2024 அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 22.10.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | M/S சாய் சக்தி & கோ, சேலம் | (–)0.36 % குறைவு |
| 2 | M/S PPS அண்ட்கோ, சேலம் | (+)1.33% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.36% குறைவாக கொடுத்துள்ள M/S சாய் சக்தி & கோ, சேலம் ஒப்பந்ததாரர், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.1098 /2024/இ1)**

**பொருள் எண்: 28**

வடலூர் நகராட்சி விக்கரவாண்டி – கும்பகோணம் – தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையின் இருபக்கமும் LED தெருமின் விளக்குகள் அமைக்கும் பணியில் கடலூர் – விருத்தாச்சலம் சாலையில் மைய தடுப்புகளில் உள்ள விளக்குகளை அகற்றி அவற்றில் உள்ள LED விளக்குகளை புணரமைப்பு பணி செய்ய தேவையான உதிரிபாகங்கள் கொள்முதல் செய்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்தில் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.573,நாள்.30.09.2024 அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 22.10.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | D.V.Engineering Works, Chennai | (+)1.02% அதிகம் |
| 2 | D.V.Poles Pvt.Ltd,Chennai. | (–)0.03 % குறைவு |

**அலுவலகக்குறிப்பு:–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–)0.03% குறைவாக கொடுத்துள்ள D.V.Poles Pvt.Ltd, ஒப்பந்ததாரர், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.1097 /2024/இ1)**

**பொருள் எண்: 29**

வடலூர் நகராட்சி நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களின் கடித ந.க.எண்.24909/2024/இஏ–2, நாள்.20.09.2024.ல் வார்டு எண்.20, TS,No.,33ல் உள்ள அய்யன் ஏரியில் தடுப்புச்சுவர் அமைத்து சிமெண்ட் கல் பதிக்கும் பணிக்கு ரூ.100.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 16.10.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு
ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | IJ கன்ஸ்ட்ரக்ஷன், தூத்துக்குடி | (–) 0.07 % குறைவு |
| 2 | SM தோமையார் அன் சன்ஸ், தூத்துக்குடி | (+)0.74 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:–** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.07 % குறைவாக கொடுத்துள்ள IJ கன்ஸ்ட்ரக்ஷன், தூத்துக்குடி ஒப்பந்ததாரர், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவுசெய்யலாம்.

**(கோப்பு எண். 1080 /2024/இ1)**

**நகர்மன்ற தலைவர்,**
**வடலூர் நகராட்சி**

**வடலூர் நகராட்சி**

**மன்றக் கூட்ட அழைப்பிதழ்**

*************

**2024 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29.10.2024. செவ்வாய் கிழமை காலை 10.45 மணிக்கு நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் நடைபெறும். அதற்கான மன்றபொருள்கள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. அவ்வமயம் தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.**

**நகர்மன்ற தலைவர்,**

**வடலூர் நகராட்சி.**

2024 – ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29ம் தேதி திங்கள்கிழமை காலை 10.45 மணிக்கு நடைபெற்ற வடலூர் நகராட்சி நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் நடவடிக்கைகள்.

முன்னிலை: திரு. சு. சிவக்குமார்,
நகர்மன்ற தலைவர்,
வடலூர் நகராட்சி

பொருள் எண்: 11

வடலூர் நகராட்சி பெருநிவனங்களின் சமூகபொருப்புணர்வு திட்டம் ( NLC – CSR) 2024–2025 நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் மூலம் மேல்நிலை நீர்தேக்கதொட்டிகளுக்கு ஆழ்துளை கிணறுகள் அமைத்திட மாவட்ட ஆட்சித்தலைவர் கடலூர் மாவட்டம் அவர்களின் கடிதந.க.எண் பஇ1/4621/2019,நாள்.30.07.2024ன்படி வடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டுஎண்.07, காட்டுக்கொல்லை மற்றும் வார்டுஎண்.22 மாருதி நகர் ஆகிய பகுதிகளில் ஆழ்துளை கிணறுகள் அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி, பணிக்கு மும்முனை மின் இணைப்பு வழங்குமாறு இவ்வலுவலக கடிதந.க.எண் 713/2022/இ1, நாள்.13.09.2024 மூலமாக மின்சாரவாரியத்திற்கு கடிதம் அனுப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி கட்டணம் செலுத்துமாறு இளமின் பொறியாளர் வடலூர் நகரம் அவர்களின் கடிதந.க.எண். இ/பி/பொ/இ ப/ நகரம்/வட/கோ.மதி /இ.எண்.84 (ம) 85, நாள்.04.10.2024 மூலமாக பட்டியல் சமர்பிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின்விபரம் | தொகை ரூ |
|---|---|---|
| 1, | மாருதி நகர் ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி | 50,620/– |
| 2 | காட்டுக்கொல்லை ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி | 50,620/– |
| | மொத்தம் | 1,01,240/– |

மேற்படி, தொகைரூ.1,01,240/–நகராட்சி வருவாய்நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 713/2024/இ1)

தீர்மானம் எண் . . நாள்.29.10.2024. அனுமதிக்கப்பட்டது.

ஒம்) திரு. சு. சிவக்குமார்,
நகர்மன்றதலைவர்,
வடலூர் நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்(கூ.பொ)
வடலூர் நகராட்சி

**2024-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 29ம் தேதி திங்கள்கிழமை காலை 10.45 மணிக்கு நடைபெற்ற வடலூர் நகராட்சி நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் நடவடிக்கைகள்.**

**முன்னிலை: திரு. சு. சிவக்குமார்,**
**நகர்மன்ற தலைவர்,**
**வடலூர் நகராட்சி**

**பொருள் எண்: 27**

இந்நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையம் அமைக்கும் பணியில் பேருந்துகள் உள்நுழைவு வாயில் பகுதியில் RCC அலங்கார வளைவு மற்றும் பேருந்துகள் வெளியே செல்லும் வாயில் பகுதியில் RCC அலங்கார வளைவு அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.20.00 இலட்சத்தில் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.572, நாள்.30.09.2024 அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 22.10.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | சதவீதம் |
|---|---|---|
| 1 | M/S சாய் சக்தி & கோ, சேலம் | (-)0.36 % குறைவு |
| 2 | M/S PPS அண்ட்கோ, சேலம் | (+)1.33% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு :-** மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (-) 0.36% குறைவாக கொடுத்துள்ள M/S சாய் சக்தி & கோ, சேலம் ஒப்பந்ததாரர், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**(கோப்பு எண்.1098 /2024/இ1)**

**தீர்மானம் எண் . . நாள்.29.10.2024. அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) திரு. சு. சிவக்குமார்,**
**நகர்மன்றதலைவர்,**
**வடலூர் நகராட்சி.**

//உண்மை நகல்//

**ஆணையாளர்**
**வடலூர் நகராட்சி**